1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இது வாய்க்காலைச் சீர்படுத்தும் முயறசியே தவிர ஓரத்தில் உள்ள குடிசைகளைப் பற்றிய முயற்சி அல்ல. அதைப்பற்றி குடிசை மாற்று வாரியத் தலைவரிடத்தில் கேட்க வேண்டும்.

கருக்காகண்டியில் பாலம்

*726 வின— திரு. ஈ. எம். நடராசன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், கொள்ளேக்கால்—செல்லம் பாளையம் ரோட்டில் கருக்காகண்டி என்னுமிடத்தில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ): மத்திய சாலை நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூபாய் 10.92 லட்சம் செலவில் கொள்ளேக்கால்—செல்லம்பாளையம் சாலையில் ஒரு பாலம் அமைக்கும் செயற்குறிப்பு மத்திய அரசின் ஒப்பளிப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளது.

திரு. கே. ரங்கனதன்: தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் பாப்பநாயக்கன் பாளையம், கணபதி, கிருஷ்ணராயபுரம் ஆகிய இடங்களின் மத்தியில் உள்ள சங்கரனூர் பள்ளத்தில் மேம்பாலம் கட்ட வேண்டுமென்று நீண்ட நாள் கோரிக்கை இருக்கிறது. அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று நினைக்கிறேன். தனியாக கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

பீங்கான் பொருள்கள் தயாரிப்பு

*727 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்—மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பீங்கான் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களை ஊக்கப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?